News Release

வாகனின் சிறப்புக்கான விருது 10 ஆண்டுகளைக் கொண்டாடுகிறது

சமூகத்திற்கு நீண்டகாலமாகப் பங்களிப்புச் செய்த 11 சிறப்புமிக்க நபர்கள் கௌரவிக்கப்பட்டனர்

வாகன், ஒன்(நவ. 12, 2026) – வாகன் சிறப்புக்கான விருதின் (Order of Vaughan) 10ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில், சமூகத்தின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் நீண்டகாலமாகப் பங்களிப்புச் செய்த 11 சிறப்புமிக்க நபர்களை வாகன் நகரம் கௌரவித்துள்ளது.

நவம்பர் 10ஆம் தேதி, வாகன் நகர மண்டபத்தில் நடைபெற்ற 2026ஆம் ஆண்டுக்கான வாகன் சிறப்புக்கான விருது வழங்கும் விழாவிற்கு மேயர் ஸ்டீவன் டெல் டுகா தலைமை தாங்கினார். வாகனில் வாழ்வதற்கும், பணியாற்றுவதற்கும், வருகை தருவதற்கும் ஏற்ற சிறந்த இடமாக நகரை உருவாக்குவதற்குத் தங்களின் அர்ப்பணிப்பாலும் முயற்சிகளாலும் பங்களித்த சமூகத் தலைவர்கள் இவ்விழாவில் அங்கீகரிக்கப்பட்டனர்.

சமூகத்தின் வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றிய பின்வரும் 10 சிறப்புமிக்க நபர்களுக்கு **2026ஆம் ஆண்டுக்கான வாகன் சிறப்புக்கான விருது** வழங்கப்பட்டது:

- அல் டோரியா – தடகளம்
- சார்ல்ஸ் கமில்லேரி – அணுகல்தன்மை
- டொமினிக் குரேரி – தொண்டு
- எலன் கொன்டார்டி – அணுகல்தன்மை
- டாக்டர் எஹ்சான் கான் – சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு
- மாண்புமிகு ஜியுசெப்பினா டி'அகோஸ்டினோ – பொதுச் சேவை
- ஜோசப் குலிசியா – சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு
- நவோமி ஜூல்ஸ் – இலாப நோக்கற்ற அமைப்பு
- ரப்பி N. டேனியல் கொரோப்கின் – ஆன்மிகம்
- டாக்டர் ரொபெர்டா இயானாசிட்டோ-புரொவென்சானோ – கல்வி

இந்த ஆண்டு, வாகன் சிறப்புக்கான விருதின் 10ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில், வாகன் நகரம் புதிதாக மரபுப் புகழ் விருதை (Legacy Award) அறிமுகப்படுத்தியுள்ளது. வாகனின் வளர்ச்சிக்கு நீடித்த பங்களிப்புச் செய்த மறைந்த நபர்களைக் கௌரவிக்கும் வகையில் இந்த விருது வழங்கப்படுகிறது.

News Release

2026ஆம் ஆண்டுக்கான மரபுப் புகழ் விருது, பொதுச் சேவைப் பிரிவில் முன்னாள் மேயர் லோர்னா டி. ஜாக்சனுக்கு வழங்கப்பட்டது.

“வாகன் சிறப்புக்கான விருதின் 10ஆவது ஆண்டு நிறைவு விழாவிற்குத் தலைமை தாங்கி, எமது நகரின் வளர்ச்சிக்கு தங்களின் சேவையாலும் தலைமைத்துவத்தாலும் பங்களித்த சிறப்புமிக்க நபர்களைக் கௌரவித்தது எனக்குப் பெருமையாக இருந்தது,” என மேயர் ஸ்டீவன் டெல் டுகா தெரிவித்தார். “இந்த ஆண்டு, 10 சிறப்புமிக்க விருதாளர்களை நாம் பெருமையுடன் அங்கீகரித்ததுடன், வாகனுக்கு நீண்டகாலமாகப் பங்களிப்புச் செய்த முன்னாள் மேயர் லோர்னா டி. ஜாக்சனுக்கு வழங்கப்பட்ட முதலாவது வாகன் மரபுப் புகழ் விருதையும் அறிமுகப்படுத்தினோம். இந்த ஆண்டின் விருது பெற்ற அனைவருக்கும் எனது வாழ்த்துகள். எமது சமூகத்தில் நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்தியதற்காக உங்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கிறேன்.”
வாகன் நகரின் 25ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, வாகனின் குடிமைச் சமூக வாழ்க்கைக்குக் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளைச் செய்த நபர்களை அங்கீகரிப்பதற்காக 2016ஆம் ஆண்டில் வாகன் சிறப்புக்கான விருது உருவாக்கப்பட்டது. இந்த விருது அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து இதுவரை 91 நபர்கள் இவ்விருதைப் பெற்றுள்ளனர்.

வாகன் சிறப்புக்கான விருது குறித்து மேலும் அறிய, vaughan.ca/OrderOfVaughan என்ற இணையத்தளத்தைப் பார்வையிடவும்.

-30-

வாகனைப் பற்றி: வாகன் நகரம் கனடாவின் மிகவும் வேகமாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றாகும், இதன் மக்கள் தொகை 344,412 ஆக உள்ளது. 1991-இல் இணைக்கப்பட்ட வாகன், கான்கார்ட், க்ளீன்பர்க், மேப்பிள், தோர்ன்ஹில் மற்றும் வுட்பிரிட்ஜ் சமூகங்களை உள்ளடக்கியது. இந்தக் கலாச்சார ரீதியாகப் பன்முகத்தன்மை கொண்ட நகரம், யார்க் பிராந்தியம் மற்றும் கிரேட்டர் டொராண்டோ பகுதியின் மையத்தில் அமைந்துள்ளது.

MEDIA CONTACT: City of Vaughan
Communications, Marketing and Engagement Department
905-832-2281 | corpcomm@vaughan.ca